பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | மார்கழி 4 | எபர் 10 | இதழ் 310
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 19-12-80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-12-17
PERIODICALS DIVISION

## லக்ஷ்மன் ஜயக்கொடி பதவி ஏற்ருர்

(கொழும்பு)
அத்தனகல தொகுதி எம்.பி. யாக நேற்று முன்தினம் நியமிக்கப்பட்ட திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி நேற்று பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக் கொண்டார். அவர் பதவி ஏற்றதையடுத்து காலி எம்.பி. திரு. தகநாயக்கா அவருக்கு கைலாகு கொடுத்துத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் புதிய எம். பியைப் பாராட்டினர்,

திரு. ஜயக்கொடி சபையில் கம்பஹா எம். பி திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

### சபாநாயகர் மீதான அவநம்பிக்கைப் பிரேரணை

# விவாதத்தை ஒத்திவைக்க பிரதமர் மறுப்பு!

## 23-ம் திகதி பிரேரிக்க மாட்டோம் என்கிருர் 'அமிர்'

(கொழும்பு)

**கலவான எம். பி. விவகாரம் தொடர்பாக சபாநாயகர் அளித்த தீர்ப்பை ஆட்சேபித்து எதிர்க்கட்சியினர் சபாநாயகருக்கு எதிராகச் சமர்ப்பித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தை ஒத்திவைப்பது தொடர்பாக நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆராயப்பட்டது.**

**நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தை ஒத்திவைக்கப் பிரதமர் திரு. பிரேமதாசா மறுத்தார்.**

இதை அடுத்து எதிர்க்கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் சுதந்திரக் கட்சியினதும் பாராளுமன்றக் குழுக்கள் நேற்று இரு தடவைகள் ஒன்ருகக் கூடி இவ்விவகாரம் குறித்து நீண்ட நேரமாக ஆராய்ந்தன. மாலை 4 மணிக்கு பாராளுமன்றத்திலும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலத்திலும் இரு கட்சியினரும் கூடி இது குறித்து ஆராய்ந்தனர்.

நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தை ஜனவரியில் ஒரு தினத்தில் நடத்துமாறு சபாநாயகரிடம் எதிர்க்கட்சியினர் விடுத்திருந்த கோரிக்கை தொடர்பாக நேற்றுக் கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்ந்தனர்.

சபாநாயகர் ஜனவரி மாதம் இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் செல்ல இருப்பதால் அவர் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு இம்மாதத்திலேயே ஒரு முடிவு காண வேண்டும் என்றும்—

அவநம்பிக்கை குற்றம் சுமத்தப்பட்ட நிலையில் அவர் வெளிநாடு செல்வது ஜனநாயகத்திற்கு ஏற்றதல்ல. எனவே அவ்விவாதத்தை இம்மாதம் 23-ம் திகதியே நடத்தவேண்டுமென்றும் பிரதமர் அங்கு வலியுறுத்திக் கூறினர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், விவாதத்தை ஒத்திப்போட அனுமதிக்காவிடின் நம்பிக்கையில்லாப்பிரே

(8-ம் பக்கம் பார்க்க)

## மதுரை மகாநாட்டையொட்டி சபை ஒத்திவைக்கப்படாது!

### எதிக்கட்சிகளின் கோரிக்கைக்கு பிரதமர் மறுப்பு

(கொழும்பு)
கலவான தொகுதி விவகாரம் தொடர்பான பிரேரணை ஜனவரி மாதம் 6-ம் திகதியே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

மதுரையில் நடைபெறவுள்ள உலகத் தமிழாராய்ச்சிமாநாட்டையொட்டி ஜனவரி முதல் வாரத்தில் பாராளுமன்றக் கூட்டத்தொடரை நடத்துவதில்லை என்று பாராளுமன்றத்தில் முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இச்சட்டமூலம்பற்றி தெரிவித்த பிரதமர்; தற்போது தயாராகி கொண்டிருக்கும் இச்சட்டமூலம் [illegible] கூட்டத்தில் ஆராயப்பட்டு உயர்நீதிமன்றத்திற்குஅனுப்பி வைக்கப்படும்ஜனவரி 6-ம்தேதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அன்றையதினமே நிறைவேற்றப்படும்' என்ருர்.

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் 'மதுரையில் நடைபெறவுள்ள மாநாட்டில் தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்வதால் இதனை ஜனவரி 4-ம் திகதிக்கு முன்னரோ அல்லது 12-ம் திகதிக்குப்பின்னரோ சமர்ப்பிக்குமாறு கேட்டார்.

திரு. மைத்திரிபால சேனநாயக்க பேசுகையில் 'மதுரையில் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி ஜனவரி 2-ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும், என்ருர். [illegible]

## ஜெரனி-எம். டி. எச். மோதல்

### சபையில் அமளி துமளி!

(கொழும்பு)
நிதி அமைச்சர் திரு. ரொனி டி. மெல்லுக்கும் கடுவல எம். பி. திரு எம். டி. எச். ஜெயவர்த்தனவுக்குமிடையே நேற்றுப் பாராளுமன்றத்தில் மோதல் ஏற்பட்டது.

இன்னுமொரு கட்டத்தில் திரு. டி மெல்லுக்கும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்குமிடையே பலத்த வாக்குவாதம் இடம்பெற்று சிறிது நேரம் சபையில் 'அமளி துமளி' ஏற்பட்டது,

நேற்று மாலை தேநீர் இடைவேளையின் பின் சபை கூடிய போது நல்லூர் எம், பி. திரு. எம். சிவசிதம்பரம் பிரதி சபாநாயகர் திரு. நோர்மன் வைத்தியரத்னவினல் பேச அழைக்கப்பட்டு எழுந்தார். அப்போது கூடவே எழுந்த கடுவல எம். பி. திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன பேச முயன்ருர்.

நல்லூர் எம். பி. க்கு முதலில் தாம் பேசுவது குறித்து எதிர்க்கட்சித் தலைவருடன் ஏற்கனவே தாம் கூறிவிட்டதாகவும் தமக்குப் பின் அவரைப் பேச அனுமதியுங்கள் என்றும் திரு. ஜயவர்த்தன கூறினர்.

### ஜெரனி குறுக்கீடு

அப்போது குறுக்கிட்ட நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் தாம் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்புவதாகக்கூறி திரு. ஜெயவர்த்தன எதிர்க்கட்சியில் சேர்ந்துவிட்டாரா என்று கேள்வி எழுப்பினர்.

பிரதி சபாநாயகர்; அவர் எதிர்க்கட்சியில் சேர்ந்தது குறித்து எனக்கு அறிவிக்கப்படவில்லை.

எம். டி. எச்.: நான் எதிர்க்கட்சியில் சேரவில்லை.

ரொனி: எதிர்க்கட்சியினருடன் அரச உறுப்பினர் இரகசிய ஏற்பாடு செய்யமுடியுமா?

பிரதி சபா; அரசாங்கக் கட்சியினர் எதிர்க்கட்சியினருடன் ஏற்பாடு எதுவும் செய்யமுடியாது.

இதை அடுத்து திரு. ஜெயவர்த்தனவைப் பேச அனுமதிக்க மறுத்த பிரதி சபாநாயகர் திரு. சிவசிதம்பரத்தைப் பேசுமாறு கூறினர்.

அடுத்துப் பேசிய திரு சிவசிதம்பரம் தாம் திரு. மெல்லுக்கும் திரு, ஜெயவர்த்தனவுக்குமிடையில் நிற்க முடியவில்லை என்று கூறித் தமது பேச்சை முடித்துக்கொண்டார்.

ரொனி; கொத்மலை எம், பி. தமது பதவியை ராஜினமாச் செய்யப்போவதாக நான் அறிகிறேன்.

### அமளி துமளி

இக்கட்டத்தில் தமது இருக்கைகளை விட்டு எழுந்த சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் (கொத்மலைஎம். பி. திரு. ஆனந்ததசநாயக்கா) உட்பட திரு. ரொனி மெல் தமது இக்கூற்றை வாபஸ் பெறவேண்டும் என ஒரே குரலில் கூறினர்கள். அப்

(8-ம் பக்கம் பார்க்க)

விற்பனையாகிறது

ஆனந்தா வாரக்கலண்டர்!

தடித்தமட்டையில் ஒட்டிய அழகிய பெரிய படங்களுடன் தினசரி திதி, நட்சத்திரம், யோகம், ராகுகாலம், சுபநேரம், முதலிய பஞ்சாங்கக் குறிப்புகளும், விசேட தினங்கள், அரசாங்க பொது விடுமுறை தினங்களும் விளக்கமாக உள்ளன.

விலை ரூபா 7-00

ஆனந்தா புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி — யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 348 7656

நியாயமான விலையில் தரமான பொருட்கள்;

கேக் தயாரிப்பதற்கு வேண்டிய

0 கஜு
0 பிளம்ஸ்
0 கறனஸ்
0 றேசின்ஸ்
0 கனடீட்பீவ்
0 செரிஸ்
0 ஜிஞ்சர் பிறிசேவ்
0 சௌவ் - சௌவ்
0 பம்கின் பிறிசேவ்
0 சொவ் (F ற் சுகர்
0 ஐசிங் சுகர்
0 கோல்டன் சிறப்
0 மற்றும் இதர பொருட்கள்

புஸ்பா றேட்ஸ்
எசன்ஸ் ஹவுஸ்
மும்சாக் கட்டிடம், 11/4 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
போன்: 8237

CORDIAL SETS
ESSENES-VARIETIES
TANK
SUN-QUICK CORDIAL
IMPORTED
BISCUITS
SWEETS
PEPSI COLA
COCA COLA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதிக்கு அண்மையில் நல்ல சுற்றுடல் மத்தியில் அமைந்துள்ள சற்சதுரமான நான்கு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. ஒரு பரப்பின் விலை பதினெட்டாயிரம் ரூபாவாகும். தொடர்பு விலாசம்; ஒலிம்பியா ஒட்டோ வேர்க்ஸ், ஸ்ரேசன் ரோட், சுண்ணாகம். 7672

சீமை வெள்ளை பன்றி விற்பனைக்கு உண்டு. சுமார் 200 ரூத்தல் — இ கமலேந்திரம், சுதுமலை வடக்கு மானிப்பாய். 7683

யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் சகல வசதியுடன் வீடு வளவு விற்பனைக்கும், பெண்களுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்துப் அறைகள் வாடகைக்கும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். சி. கனகரெத்தினம், 465/1 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 7666

## கொமிஷனுக்கு

நல்ல நிலைமையில் இயங்கும் பேக்கரி ஒன்று சகல தளபாடங்களுடன் கமிஷன் அடிப்படையில் கொடுக்கப்படும் அல்லது பரப்புக் காணி கட்டிடத்துடன் மேற்படி பேக்கரி விற்பனைக்கும் கொடுக்கலாம். விபரங்களுக்கு: உரிமையாளர், அ... பாள் பேக்கரி, பிள்ளையார் கோவிலடி, அராலி. 7674

## தேவை

பலசரக்கு வியாபாரத்தில் அனுபவப்பட்டவரும் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவரும் 25 வயதுக்குட்பட்டவருமான ஆள் தேவை. உடனடியாக நேரில் வந்து தொடர்புகொள்ளவும்- நஞ்சுணு ஸ்ரோர்ஸ், பாங்சால் வீதி, சின்னக்கடை, யாழ்ப்பாணம். 7682

யாழ்ப்பாணத்தில் பிரபலமான தொழிற்சாலைக்கு கணக்காளர் வேலைக்கு பெண்பிள்ளைகள் தேவை. G.C.E. (O/L) கணிதம், ஆங்கிலம், ரைப்பிங் சித்தியடைந்திருத்தல் விரும்பத்தக்கது. 26-12-1980க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 7665, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7665

## தவறிவிட்டது

H 526961 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் தவறிவிட்டது. அதனை கண்டெடுத்தவர்கள் 70, பலாலி வீதி, கந்தர்மடம் என்ற முகவரிக்கு சேர்த்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 7662

## சுங்க ஏலவிற்பனை

கீழ்க்காணும் பொருட்கள் 23-12-80 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனையின் முழுநிபந்தனைகளும் 1954ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி வெளியிடப்பட்ட 1057-ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1ம் பிரிவு 2ல் பிரசுரிக்கப்பட்டுள்ளன

(1) 100 நைலோன் மீன்பிடி வலைகள் (1 1/8'' × 1500 ML-210 d/2-330 M...)

எஸ். எம். ஜே. சேனரத்தின
உதவி சுங்க சேகரிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

சுங்க அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-12-80 7651

## மா. அ. சபை தேர்தல் சட்ட மூலம்

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல்கள் சட்ட மூல மசோதா ஜனவரிமுதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சட்ட மூலம் நேற்று அமைச்சரவையில் ஆராயப்பட்டது. (கு)

## பண்டத்தரிப்பு பட்டணசபை வேலை விபரம்

பண்டத்தரிப்பு பட்டணசபையின், சந்தை வளவில் நவீன சந்தை, அலுவலகம் நூல் நிலையம் ஆகியவற்றினைக் கொண்ட ஓர் கட்டிடத்தினை அமைப்பதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

மேற்படி வேலைக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் பண்டத்தரிப்பு பட்டணசபை அலுவலகத்தில் 31-12-80 ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் நன்நம்பிக்கைப் பணமாக ரூபா 1000/-ம் கேள்விப்பத்திரப் பணமாக ரூபா. 100/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தில் அல்லது ஏதாவது ஒரு உள்ளூராட்சி மன்றத்தில் ரூபா. 100,000/-க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகை வேலைக்குப் பதிவுசெய்யப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் இணைப்பிரதிகளைக் கொண்டதாக, இருபிரதிகளும் 7-1-81ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக, "விசேட ஆணையாளர்" பட்டணசபை, பண்டத்தரிப்பு" என முகவரியிட்டு, சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியிலோ, அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலைக்குரிய பெயர் குறிப்பிட்டு, அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் 9-1-81ம் திகதி முற்பகல் 10-00 மணியளவில் திறக்கப்படும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரர் 20-1-81ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன்பதாக இதற்குரிய பிணைப் பணம் முழுவதையும், பணமாகவோ அன்றிப் பட்டண சபையால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியுடன் ஓர் முறியை நிறைவேற்றி, மேலும் இவ் வேலையைப் பூர்த்திசெய்து தருவதற்குரிய ஒப்பந்தம் ஒன்றை பட்டணசபையுடன் செய்துகொள்ளல் வேண்டும்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் இவ்வலுவலகத்தில், அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

மா. மயில்வாகனம்,
விசேட ஆணையாளர்,
பண்டத்தரிப்பு-
பட்டணசபை.

பட்டணசபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு.
16-12-80. (7680)

த. சோமசுந்தரம்
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தற் படிவம்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய காரைநகர் பலுசாட்டில் வதிந்த வேலுப்பிள்ளை ஆறுமுகம்பிள்ளையின் மரண சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்

சண்முகம் நடராசா,
வேம்படி,
தங்கோடை, காரைநகர்.
மனுதார்.

வழ. இல. தத்துவம் /20

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக/மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981ம் ஆண்டு தை மாதம் 16ந் நாளன்று முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

1980 ம் ஆண்டு ஆடிமாதம் 23-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

7664

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை (பழைய பாடத்திட்டம்) ஏப்ரல் 1981 மீட்டல் வகுப்புகள். வினாக்களும் அதற்றிற்குரிய விடைகளும் என்ற முறையில் நடத்தப்படும்.

விண்ணப்பங்கள் 26-12-80 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இந்த வகுப்புகளில் சேர விரும்புவோர உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளுடன் அக்கடமி காரியாலயத்தில் உள்ளவிண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 31-12-80-ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்

தொலைபேசி எண் 617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 7679

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த கந்தையா சிவப்பிரகாசத்தின் மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்களின் நிர்வாக விடயத்தில்

கந்தையா சிவப்பிரகாசம்,
— மரணமெய்தியவர்

கந்தையா சிவப்பிரகாசத்தின் கைம்பெண் அன்னபூரணம்,
தெல்லிப்பழை கிழக்கு;
தெல்லிப்பழை
— மனுதார்

எதிர்

வழ. இல. ரி. 80.

1. சிவப்பிரகாசம் கோமதி.
2. சிவப்பிரகாசம் சுமதி,
3 சிவப்பிரகாசம் சாந்தி,
4. சிவப்பிரகாசம் இந்துமதி.
5. சிவப்பிரகாசம் கலாமதி,
6. சுந்தரம் முருகையா,

பராயமடையாத 1-ம், 2-ம், 3-ம், 4-ம். 5-ம் எதிர்மனுதாரின் பாதுகாவலர் எல்லோரும் தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. — எதிர்மனுதார்

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலேபெய குறிப்பிட்ட இறந்துபோனவரின்மரண சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1981ம் ஆண்டு மாசி மாதம் 6-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக தாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1980ம் ஆண்டு கார்த்திகை மாதம் 13-ம் திகதியிடப்பட்டது.

நீதிமன்றக்கட்டளைப்படி,
மூ. நல்லலிங்கம்,
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
எஸ். தில்லையர்,
மனுதாரின் சட்டத்தரணி.
7596

## கல்வி மந்திரியிடம் கோரிக்கை

(உடுப்பிட்டி)

கரவெட்டி கன்பொல்லை ஸ்ரீ நாரத வித்தியாலயத்திற்கு நிரந்தர அதிபர் ஒருவரை நியமித்துத் தருமாறு கல்வி அமைச்சரிடம் கோரப்பட்டுள்ளது.

கரவெட்டி இராஜலிங்க கிராம அபிவிருத்திச் சங்கம், இராஜலிங்க கிராம சனசமூக நிலையம் ஆகியன கூட்டாக கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றிலேயே மேற்கண்டவாறு கோரப்பட்டிருக்கிறது. இவ் வித்தியாலயத்திற்கு இரு பட்டதாரி ஆசிரியர்களையும் நியமித்துத், தருமாறும் கோரப்பட்டுள்ளது. (கு)

இ. கமலநாதன்
சட்டத்தரணி
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி செல்லப்பா கைம்பெண் பவளக்கொடி என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

பொன்னம்பலம் சேனாதிராசா, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன ]
நியாயாதிக்கம் ] இல. 3562

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றான கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1980 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.
7678

## மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம்

மேற்படி கூட்டம் எதிர்வரும் 28-12-80 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். பழைய மாணவர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

அ. மகாதேவன்,
அதிபர்,
மல்லாகம் மகா வித்தியாலயம்.

16-12-1980 7673

யாழ்நகரில்

# நத்தார் மலிவு விற்பனை

சகலவிதமான ஒலிப்பதிவு வேலைகளுக்கும், யாழ். நகரில் முன்னணி ஸ்தாபனம்.
V. P. P. கவனிக்கப்படும்.

- நாசனல் பனசோனிக் (National Panasonic) றேடியோக்கள். றேடியோ கசட், தனிக் கசட்டுகள்.
- பிக்ஸ்ரோன் (Bigstone) கசட், கசட் றேடியோக்கள்.
- செனிக் (Senic) றேடியோ.
- எலக்ட் (Elect) றேடியோ.
- சுசுக்கி (Suzuki) றேடியோ.
- ஸ்கைறோ (Skyro) றேடியோ.
- மக்ஸல் (Maxel)-. அக்வா (Agfa) ரீடிகே (T D K), சங்கி (Sanki), கசட் வகைகள்...

நாஷனல் பனசோனிக் தயாரிப்புக்களுக்கு யாழ்ப்பாணப்பகுதி விநியோகஸ்தர்கள் :

# றேடியோஸ் பதி

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 7805

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் வீடுடைப்பு, வழிப்பறி கொள்ளை அதிகரிப்பு

(நமது நிருபர் ரி. எஸ். தர்மசிங்கம்)

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் வீடுடைப்பு, கடைஉடைப்பு, கொள்ளைகள் தாலிக்கொடிபறிப்பு, வழிப்பறி சைக்கிள் திருட்டுக்கள், கோயில் திருட்டுக்கள் தினமும் நடைபெறுகின்றன. பொலிஸாரின் தீவிர நடவடிக்கையினால் சில சம்பவங்கள் துப்புத்துலக்கப்பட்டு சந்தேக நபர்களும் சிக்கியுள்ளனர்.

சங்கானையிலும், செட்டிக்குளத்திலும வீடுடைத்து தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

மாங்குளத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறையில் சிறுமியிடம் தங்கச்சங்கிலி வழிப்பறி செய்யப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டானில் துப்பாக்கி முனையில் சம்பளப்பணம் கொள்ளையடிக்க முயற்சி நடந்துள்ளது.

பண்ணாகத்திலும், யாழ்நகரிலும் சில தினங்களுக்குமுன் சைக்கிள் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன. ஏழாலை காளி கோவிலில் வெள்ளி வேல்கள் திருடப்பட்டுள்ளன.

யாழ். நகரில் அண்மைக் காலத்தில் இரவு நேரத்தில் நடந்த கொள்ளைகளை தொடர்ந்து பொலிஸார் இரவு நேரங்களில் விதிகளில் ரோந்து நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கொள்ளைச் சம்பங்கள் தொடர்பாக பொதுமக்கள் செய்யும் புகார்கள் மீதுபொலிஸார் உடன்நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். கடந்த காலத்தில் நடந்தபல திருட்டு சம்பவங்கள் துப்புத் துலக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (கொ)

## கலைவிழா

(அரியாலை)

இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம் கலை விழாவொன்றை கொழும்பு பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடத்தில் இம்மாதம் 26-ந் திகதி தொடக்கம் 28-ந் தகதி வரை நடாத்துகிறது.

இந்தக் கலைவிழாவில் சங்கீத நிகழ்ச்சிகள், நாடகங்கள், திரைப்படக் காட்சிகள் என்பவற்றுடன் டைபிரதேச, மலையக, தாழ்ந்த பிரதேச நாடகங்களும் நடைபெறவிருக்கின்றன. (ஈ)

புலோலி ப. நோ. கூ. ச.

## அந்தியகால சகாய நிதி சேவையை ஆரம்பிக்கும்

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் அந்திய கால சகாய நிதிச்சேவைப் பிரிவு ஒன்றை ஆரம்பித்து வைக்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதென புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு.கே.வி. செல்வராசன் தலைமையில் நடைபெற்ற சங்கத்தின் ஐந்தாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இப்பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களாவன, துன்னாலை வடக்குப்பகுதி மாயக்கிராஸ், போதரமடம், வெலிக்கந்தோட்டம் ஆகிய பகுதிகள் வரை இப்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட எழுபது ரூபா சம்பள உயர்வைச் சகல ஊழியர்களுக்கும் வழங்குவது, அரைகரும் ஆலை ஒன்றை நிறுவவேண்டும். இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உதவுவதுடன் இப்பகுதியில் வேலைவாய்ப்புக்களையும் அளிக்கமுடியும், பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தினால் நடமாடும் மரக்கறிவிற்பனை நிலையம் ஒன்றை நடாத்திக் கிராமமக்களுக்கு உதவவேண்டும்''. (க)

வராத்துப்பளை

## மின்விநியோகத் திட்டம் பொங்கலன்று பூர்த்தியாகும்

(புலோலி)

கிராமிய மின்விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் வராத்துப்பளை மின்விநியோகத்திட்டம் மிகத் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை எம்.பி திரு. கே. துரைரத்தினம் வராத்துப்பளை மின்விநியோகத்திட்டத்திற்கெனப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒரு லட்சம்ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார்.

இம்மின்னிணைப்புத் திட்டத்தினால் வராத்துப்பளை, தும்பளை தெற்கு, உத்திராவத்தை, சந்தாதோட்டம் ஆகிய கிராமங்கள் மின்விநியோகத்தைப் பெறவுள்ளன.

எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று இக்கிராமங்களுக்கு மின்விநியோகம் செய்யப்படுமென்று இலங்கை மின்சாரசபை உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

## ஒரு லட்சம் ரூபா நன்கொடை

(யாழ்ப்பாணம்)

உலக சுகாதார நிறுவனம் ஒரு லட்சம் ரூபாவை புற்றுநோய்த் தடுப்புச் சிகிச்சைக்கென சுகாதார அமைச்சிடம் வழங்கியுள்ளது.

தென்கிழக்காசிய மக்கள் புகையிலை, வெற்றிலை பாவிக்கும் காரணத்தால் வாயில் புற்றுநோய் வருவதற்கு கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும்; இந்நோயை இலகுவான முறையில் தடுக்கலாமென்றும் தெரியவருகிறது. (ச-வெ)

## பித்தளைக் காப்புகளை வைத்து வங்கியில் பணம்பெறமுயற்சி

(மாவிட்டபுரம்)

வங்கியில் பித்தளைக்காப்புக்களை அடைவு வைத்துப் பணம் பெற முயன்ற பெண்மணி ஒருவர் வங்கி அதிகாரிகளால் கண்டு பிடிக்கப்பட்டு சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த ஆனந்தராசா புனிதவதி என்ற சந்தேகநபரே மோசடி செய்ய முயன்ற சமயம் பிடிபட்டவராவார்.

இப்பெண்மணி சுன்னாகம் மக்கள் வங்கியில் ஒரு பவுண் அட்டியலையும் 2 சோடி காப்புக்களையும் கொடுத்து 2000 ரூபா பணம் அடைவுக்கு கேட்டதாகவும் அப்போது அடைவு பிடிக்கும் பிரிவி கடமைபுரிந்த வங்கி உத்தியோகத்தர் அ. பூபாலசிங்கம் நகைகளை உரைத்துப் பார்த்த போது காப்புகள் பித்தளைக்காப்புகளை என்பது தெரியவந்ததாகவும் அதனையடுத்து சுன்னாகம் பொலிசாருக்கு இதுபற்றி அறிவித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் சார்ஜன்ட் கருணாரத்தினா வங்கிக்குச் சென்று மேற்படி பெண்மணியைக் கைது செய்து விசாரணை செய்தார்.

இப்பெண் மீது ஏமாற்று மோசடி செய்ய முயன்றதாகக் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (க)

## நத்தார் சோபனம்

(அரியாலை)

நல்லூர் பரி.யாக்கோபு ஆலய நத்தார் பாடகர் குழுவினர் இன்றும், நாளையும் நாளைமறுதினமும் சபையாரின் இல்லங்களுக்குச் சென்று நத்தார் சோபனங்களைக் கூறுவர்.

இதற்கான ஏற்பாடுகளை ஆலய குருவானவரும் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனுமான அருட்திரு சாம். டி. ஹோசிங்டன் அடிகளார் செய்துள்ளார்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நேற்று முன்தினம் விசேட நத்தார் கரோல் ஆராதனை நடைபெற்றது.

இவ்வாராதனையில் நல்லூர் பரி யாக்கோபு ஆலயம், சுண்டிக்குளி பரி. யோவான் ஆலயம், கோப்பாய் பரி. மரியாள் ஆலயம், என்பவற்றின் பாடகர் குழுக்கள் கலந்து கொண்டு கரோல் பாடல்களைப் பாடினர். (ஈ)

## அளவெட்டி கொலை வழக்கு

(மாவிட்டபுரம்)

அளவெட்டி வடக்கு கொலை வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த காளிதாஸ் கணேசமூர்த்தியின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அவ்விடத்தைச் சேர்ந்த பொன்னையா கந்தசாமி, கந்தவனம் லோகநாதன், இராசரத்தினம் இராமச்சந்திரன் ஆகியோர் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுப் பின்னர் உயர்நீதிமன்ற அனுமதியின் பேரில் பிணையில் விடப்பட்டிருந்தனர். இவர்கள் மூவர் மீதும் கொலைக்குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது நீதிபதி திரு. சி. ஆர். ராஜசிங்கம் வழக்கை ஜனவரி மாதம் 7 ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (கு)

## சங்கக்கடையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுச் சங்கக்கடை உடைக்கப்பட்டு கடையிலிருந்த சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் மாங்குளத்திலுள்ள ஒட்டாங்குளம் விநாயகபுரத்தில் நிகழ்ந்துள்ளது.

கொள்ளை சம்பந்தமாக சங்கக் கடை உதவி முகாமையாளர் குகநாதன் மாங்குளம் பொலிசில் செய்துள்ள புகாரில் தெரிவித்துள்ளதாவது;

இம்மாதம் 11-ம் திகதி சங்கத்தின் முகாமையாளர் சுகயீனம் காரணமாக லீவில் சென்றிருந்தார் நானும் சிற்றூழியர்களும் தான் வேலை பார்த்தோம். அன்றிரவு எமது சங்கக்கடை உடைக்கப்படுவதை அறிந்து சத்தம் போட்டு அயலவர்களைக் கூப்பிட்டோம். அயலவர்கள் வருவதற்குமுன் கொள்ளையர்கள் ஓடினர். சங்கக்கடைக்குச் சென்று பார்த்தபோது கடையின் முன்பக்கம் உடைக்கப்பட்டு சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான புடவைவகைகளும் சிகரெட்வகைகளும் கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்தது.

கொள்ளை சம்பந்தமாக மாங்குளம் பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கொ)

## நல்லூர் சிவன்கோவிலில் ஆருத்ராபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சிவன்கோவிலில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சங்காபிஷேகம நடைபெறவுள்ளது.

இரவு 7-30 மணிக்குத் திருவூஞ்சலும் 2-30 க்கு சங்காபிஷேகமும் நடைபெறும் திங்கள் அதிகாலை 4-45க்கு விசேஷ பூசையும் 5-30 க்கு ஆருத்ரா தரிசனஉற்சவமும் நடைபெறும். தரிசன உற்சவத்தில் கோதரிசனம், பூரண கும்பதரிசனம், தர்ப்பனம் தரிசனம், தீபதரிசனம், பக்தர் தரிசனம் இடம்பெறும்.

மஹேஸ்வரசிவஸ்ரீ பா. ஸ்ரீநிவாசக்குருக்கள் விழாவை நடத்தி வைப்பார். (அ)

# பணயக்கைதிகள் டிச.25-க்குமுன் விடுதலை?

தெஹ்ரான், டிசம்பர் 18

**பதினைந்து மாதங்களாக, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கப் பணயக்கைதிகள் ஐம்பத்தொரு பேரும், எதிர்வரும் நத்தார் தினத்துக்கு முன்னர் விடுதலையாகும் சூழ்நிலை இப்பொழுது உருவாகியுள்ளது.**

பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக ஈரானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே கடந்த சில வாரங்களாக, அல்ஜீரியா மூலமாக 'பேச்சுவார்த்தை'கள் நடைபெற்று வந்தது தெரிந்ததே.

கடைசியாக அமெரிக்கா அனுப்பிவைத்த சடிதத்துக்கு ஈரானின் பதில் இப்பொழுது எதிர்பார்க்கப்படுகிறது.

ஈரானின் அதிகார சபையின் உயர்மட்ட வட்டாரங்களிலிருந்து வெளிவந்த தகவல்கள், அமெரிக்காவுக்குச் சாதகமாக 'இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஈரான் சமர்ப்பித்த கோரிக்கைகளுக்கு அமெரிக்கா அனுப்பிய பதில் வரவேற்கக்கூடியதாக இருப்பதாகவும். இதுக்கூடுதலாக அமெரிக்காவிடமிருந்து பதில் எதிர்பார்க்க முடியாது என்று மேற்படி வட்டாரங்கள் தெரிவித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

சர்வபரித்தியாகம் செய்துள்ள சந்நியாசி காமகாஞ்சன ஸ்பர்சமும் செய்யான். ஒரு ஸ்திரீயினுடைய படத்தையும் கூட அவன் நோக்கான்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## உருக்கமான வேண்டுகோள்

மார்கழி மாதம் தேவர்களுடைய விடியற்காலம். ஒவ்வொரு சைவனும் வீட்டிலும் கோவிலிலும் திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் ஓதியும் ஓதக்கேட்டும் சிவவழிபாட்டிற் சிறப்பாக ஈடுபடும் காலம். இவ்வித ஆன்மார்த்த பரார்த்த பூசை நீண்டகாலமாக தமிழ்நாட்டிலும் எங்கள் நாட்டிலும் நடைபெற்றுவருகின்றது.

இந்துக்கள் மட்டுமல்ல, மற்றைய சமயத்தவர்களும் திருவாசகத்தைக் கேட்டு உருகுவாரென்பது திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமேனாட்டுக் கிறீஸ்தவத் துறவி போப் ஐயரின் கருத்தாகும். இக்கருத்தைத் தழுவி அகில இலங்கை இந்துமாமன்றம் திருவெம்பாவை 20 பாட்டுக்களுடன் போப் ஐயருடைய மொழிபெயர்ப்பைச் சேர்த்து அழகான ஒரு சிறு புத்தகத்தை இலவச வெளியீடாக வழங்கியது பாராட்டுக்குரியது.

திருவெம்பைக்காலம், மூழுமுதற்கடவுளாகிய சிவபிரான்-பேராயிரம் பரவி அனைத்துலக மக்கள் வழிபடும் ஒரே ஒரு தெய்வம்-மண்ணுலக மக்களில் இரக்கங்கொள்ளுங் காலமென்ற கருத்து சைவமக்கள் கொண்ட கருத்தாகும்.

கூத்தப்பெருமான் சிறப்பாக நடனஞ்செய்கின்ற மார்கழித்திங்களில் வருந் திருவாதிரையும் அதற்கு முன்னர் ஒன்பது நாட்களும் ஞாயிற்றின் ஒளி திங்கள் வழியாய் நாம் வாழும் பூமியின்கண் மிகுதியாய் விளங்கும் காலம். இதன் விசேஷத்தை விரிக்க அவசியமில்லை.

சுருங்கச் சொல்லின் இறைவனால்உயிர்களுடைய இன்ப நலத்தின் பொருட்டு நடத்தப்பெறும் உள்ளாட்சி (Inner Government) மிகச் சிறப்பாக நடைபெறும் காலம் இது.

உள்ளாட்சி எவ்வாறு அருளைத் துணையாகக் கொண்டு நடத்தப்படுகிறதோ, அவ்வாறே புறஆட்சியில், அரசரும், அரசியற் பணியாளரும் அருளைத் துணையாகக் கொண்டு குடிமக்கள் இன்ப நலமடையும் ஆட்சிசெய்தல்வேண்டும்.

மாணிக்கவாசக சுவாமிகள் அன்று திருவண்ணாமலையில் திருவாய் மலர்ந்தருளிய திருவெம்பாவை, இன்று பேசுவதொன்று செய்வதின்னொன்றென மக்கள் கூட்டம் பெருகிய இக்காலத்திலும் இலங்கை வானொலி மூலம் துயில்புரியும் மக்களைத்தட்டி எழுப்புகின்றது. திருவாசகத்தின் தனித்துவத்திறமைக்கு இது பெரிய சான்றாகும்.

இக்காலத்தின் புற ஆட்சி பொருட்பேற்றை முதன்மையாகக் கொண்டதால் நாட்டில் அமைதியின்மையும் துயரமும் வரவரக்கூடி வருகின்றன. அநீதிகள் எங்கும் காணப்படுகின்றன.

ஆயினும் இந்துசமயத்தில் இன்னும் காணப்படும் குறைகளில் மகாத்மாகாந்தி அடிக்கடி குறிப்பிட்டது போல சாதி வேற்றுமை முதலிடம் பெறுகின்றது. வைதிக சமயமென்ற பெயராலும், இந்து சாஸ்திரங்களின் பெயராலும் இன்றும் நடைமுறையில் காணப்படும் இத் தீமை தகர்த்தெறியப்பட வேண்டியது.

சட்டத்தின் முன்னே எல்லோரும் சமமென்றால் இறைவன் சந்நிதியில் எல்லோருஞ் சமமென்பது தானாகவே விளங்கும்.

இந்தப் புண்ணிய காலத்தில் இவ்வித வேறுபாடு கோவில்களில் இனிமேலாவது இடம்பெறக் கூடாதென்றும், இக்காலத்தில் நாகரிக உலகம் சாதி வேறுபாட்டை எவ்விதத்திலும் ஏற்றுக் கொள்ளாதென்றும், நாட்டின் சிறந்த தலங்களெல்லாம் சமத்துவ வழிபாட்டை வரவேற்றிருகின்றன என்றும் இந்து கலாசாரத் திணைக்களம் ஓர் உருக்கமான வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இந்து சமயத்திற்கு ஓர் அமைச்சு செயற்படுவதை நாம் எல்லாவிதத்திலும் ஊக்கப்படுத்த ஒத்துழைப்பு நல்கவேண்டும். அதுவும் இவ்வித நீதியான ஒரு கருமத்தை நாமெல்லோரும் முன்னின்று நடத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இறைவன் சந்நிதியில் எவ்வித வேறுபாடும் பொருத்தமற்றது; அநாகரீகமானது; பாவச்செயலுங் கூட. அப்படியாயின் அது சட்டவிரோதமான செயல் என்று நீதிமன்றம் தீர்ப்பளிக்க இடங்கொடுக்கலாமா?

தெய்வ நீதிக்கு மனிதநீதி ஈடுகொடுக்கவல்லதா?

தமிழரின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதா?

# "வெளிநாடுகளில் உங்கள் உபதேசங்களை நிறுத்துக"

## பாராளுமன்றத்தில் சம்பந்தன் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையி தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சகோதரர்களாகவும் நண்பர்களாகவும் சமத்துவமாகவும் வாழ்கின்றனர் என்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிட்டதாகவும் வெளி நாடுகளில் கூறிவருகிறீர்களே. இங்கே பாகுபாடு; புறக்கணிப்பு வெளி நாடுகளில் உபதேசமா; உங்கள் உபதேசங்களை நிறுத்துங்கள்.

இவ்வாறு திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

பல்வேறு திணைக்களங்களிலும் வேலைவாய்ப்புக்களில தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள என்றும் குற்றம் சாட்டிய திரு. சம்பந்தன் இது குறித்து புள்ளிவிபரங்களையும் சபையில் சமர்ப்பித்தார்.

திருகோணமலை ஆஸ்பத்திரியில் பணிபுரியும் மருத்துவமாதுவுக்குக்கூட தமிழ் தெரியாது. எனவே அங்கு மகப்பேறுக்குச் செல்லும் பெண்கள் பாஷை புரியாது மிகவும் சிரமப்படுகின்றனர். இது குறித்து பல கணவர்கள் எம்மிடம் புகார் செய்துள்ளனர்.

நிஸங்கா:- யாழ். ஆஸ்பத்திரியில் சிங்கள மக்களுக்கு என்ன நடக்கிறது; இதே நிலையில் அங்கு சிங்கள மக்கள் இருக்கிறார்கள்.

நிஸங்கா:- சகல ஆஸ்பத்திரிகளிலும் நோயாளர்களுக்காக மொழிபெயர்ப்பாளர்களை நியமிக்குப்படியா கேட்கிறீர்கள்?

சம்பந்தன்:- நீங்கள் இப்படியாக நகைச்சுவையாகப் பேசி மழுப்புகிறீர்கள். நீங்கள் இப்படி மழுப்ப, நாம் கடுவல எம். பி. அல்ல. நாம் கனவு காணவும் இல்லை. நாம் மட்டுமல்ல, நமது மக்களும் கனவு காணவில்லை. இங்கு நடைபெறும் சகல விஷயங்களையும் நமது மக்கள் அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள். எமக்கு இழைக்கப்படும் அநீதிகளை முடிந்தவரை நாமும் இங்கு எடுத்துக் கூறுவோம்.

சில வேளைகளில் நீங்கள் பேசும் பேச்சுக்கள் நாம் இங்கு தொடர்ந்து இருப்பதில் பிரயோசனமில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

(ம-இ)

## ஐ. தே. கட்சி வாலிப முன்னணி

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு ஐக்கிய தேசியக்கட்சிவாலிபமுன்னணியின் அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம் வைத்திய கலாநிதி திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, இணைப்போஷகர்கள்: யாழ் மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கூன், யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, தலைவர்: வைத்திய கலாநிதி எஸ். தம்பித்துரை, உபதலைவர்: மு. நடராசா, செயலாளர்: ப. ஜெயகுமாரன், உபசெயலாளர்: து. சந்திரகுமாரன், பொருளாளர்: சு. ஆனந்ததாசன் செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பதுபேர் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# 6-ம வகுப்புத்தேர்வு:மாணவர் பாதிப்பைத்தவிர்க்கவேண்டும்

ஒவ்வொரு வருட இறுதியிலும் அடுத்த புதுவருடத்திற்குப் பிரபல கல்லூரிகளில் ஆறும் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்காக ஒரு பொதுப் போட்டித் தேர்வு நடைபெறுவது வழக்கம். இத்தேர்வு யாழ் மாவட்டக் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்படுகிறது. விண்ணப்பங்கள் இரண்டுரூபா பிரவேசக் கட்டணத்தோடு முன்னுரிமைப்படி முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டகல்லூரிகளுக்குஅனுப்பப்படுகின்றன. அந்தக்கல்லூரியிலேயே தேர்வும் நடைபெறும். கல்லூரியதிபர்கள் தமது கல்லூரியிற் தோற்றிய மாணவர்களின் புள்ளிகளைத் திணைக்களத்திற்கு அனுப்புவார்கள். கல்விப்பணிப்பாளர் ஒரு குறிப்பிட்ட திகதியில்அக்கல்லூரிகளின் அதிபர்களை அழைத்துத் திறமையடிப்படையில் பிள்ளைகளை அந்தந்தக் கல்லூரிகளுக்குத் தெரிவுசெய்வர். அதன்படி அதிபர்களும் தெரிவுபற்றிப் பெற்றாருக்கு அறிவிப்பார்கள்.

பிரபல கல்லூரிகளில் அதிகமான பெற்றார் தமது பிள்ளைகளைச் சேர்க்க விரும்புவதினால் ஏற்படும் கஷ்டங்களையும் ஊழல்களையும் தீர்ப்பதற்காகவே இப்படியொரு முறை ஏற்படுத்தப்பட்டது. மிகப்பிரசாரமாகத்திறமையடிப்படையிலேயே அதாவது பெற்ற புள்ளிகளைக் கொண்டே தெரிவுநடைபெறுவதுசிறந்தது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

பிரவேச விண்ணப்பங்களில் தம்பிள்ளைகளைச் சேர்க்க விரும்பும் கல்லூரிகளின் பெயர்களை முன்னுரிமைப்படி முதலாவது இரண்டாவதுதெரிவாகக்குறிப்பிடுவது முறை. தாம் முன்னுரிமை கொடுத்த முதலாவது கல்லூரிக்குத் தமது பிள்ளை செய்யப்படாவிட்டால் இரண்டாவதாக அல்லது மூன்றாவதாகத் தெரிவு செய்யப்பட்ட கல்லூரிக்காவது பிரவேசம் கிடைக்குமா என்று காத்திருப்பது [illegible] அப்படியிருந்தக்கல்லூரி அதிபர்கள் தத்தமது கல்லூரியையே முன்னுரிமை கொடுத்து முதலாவதாகத் தெரியாமல் விட்டமைக்காகப் புள்ளிகள் மேலதிகமாகப் பெற்றிருந்தும் தமது கல்லூரியை ஏன் குறைத்து மதிப்பிட வேண்டும் என்று கூறிக்கொண்டு அப்படிப்பட்ட பிள்ளைகளைத் தெரிவு செய்வதில்லையென அடம்பிடிக்கிறார்கள்.

ஒரு கல்லூரி தெரிவு செய்யப்படுவதற்கும் பல காரணங்களிருக்கலாம். அது அண்மையிலிருக்கலாம்; சகோதர, சகோதரிகள் அங்கு படிக்கலாம்; போக்குவரத்து வசதிகள் கூடிய இடத்திலமைந்திருக்கலாம்; பெற்றார் வேலைக்குப் போகும் வழியிலிருக்கலாம் அல்லது பழைய கல்லூரியாக இருக்கலாம். ஆதலின் இரண்டாவது மூன்றாவது எனத் தெரிவு செய்வதற்காகத் திறமையடிப்படையிற் தெரிவு செய்யாமல் விடுவது பொருத்தமாகத் தெரியவில்லை.

ஒரு பொதுப் போட்டித் தேர்வு வைப்பது எதற்காக? திறமையடிப்படையில் தெரிவு செய்வதற்காகவே கல்லூரியதிபர்களுக்குள் கருத்து வேற்றுமைகள் தோன்றுமானால் ஒரு பொது நிலையத்தில் எல்

(5ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## மதுக்கடையும் தவறணையும்

ஆலயம், பாடசாலைகளுக்குச்சமீபத்தில் தவறணையோ, மதுபான விற்பனை நிலையமோ இருக்கக்கூடாதென்பது அரசின் கொள்கையாகும். இது சட்டப்படி தடை செய்யப்பட்டுமிருக்கிறது.

ஆனால் யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில் பாடசாலைகளுக்கும், மாதா கோயிலுக்கும் மிகச்சமீபத்தில் மதுபான விற்பனை நிலையமும் கள்ளுத்தவறணையும் இருக்கின்றன இவற்றை இங்கு எப்படி அனுமதித்திருக்கிறார்கள்? தவறணையையும் மதுபான விற்பனைக்கடையையும் இங்கிருந்துவேறு ஒதுக்குப்புறமான இடத்திற்கு அகற்றினால் என்ன? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது இதுபற்றிக் கவனிப்பார்களா?

பாலன்
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# நாடும் நடப்பும்....

கலவானைத்தொகுதி குட்டிபோட்டிருக்கிறது.

எப்படியோ பிரச்னைக்கு ஒரு தீர்வு காணப்பட்டு விட்டது.

நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கும் மதிப்பளிக்கப்பட்டிருக்கிறது. இடைத்தேர்தல் நடத்துவதற்கு ஜனாதிபதி விடுத்த உத்தரவும் செயல படுத்தப்பட்டிருக்கிறது.

கலவானைத் தொகுதிக்குச் சேவை செய்வதற்கு இரண்டு பிரதிநிதிகள் இருக்கப் போகிறார்கள்!

ஆனால் கலவானைத் தொகுதி இரட்டை அங்கத்தினர் தொகுதியல்ல. தொகுதி நிர்ணயக்கமிஷன்தான் இரட்டை அங்கத்தவர் தொகுதியா ஒற்றையங்கத்தவர் தொகுதியா என்பதை நிர்ணயிக்க வேண்டும். ஜனத்தொகைக்கேற்பவே தொகுதி பிரிக்கப்படும்.

இப்போது கலவானைத் தொகுதி சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதற்காகவே இந்தமுடிவு செய்யப்பட்டிருக்கிறது!

பாராளுமன்றத்தில் ஆசன வசதிப் பிரச்னையுமில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பாடசாலையில் ஒருவகுப்பில் நாற்பது பிள்ளைகளுக்குத்தான் இடமுண்டு. தவிர்க்கமுடியாத நிலையில் ஒருபிள்ளையை மேலதிகமாகச் சேர்க்க நேர்ந்தால் அந்தப்பிள்ளைக்கு இடவசதி பற்றி அதிபர் கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒருபிள்ளை வகுப்புக்கு வராமலிருக்குமென்பது நிச்சயம்.

பாராளுமன்றத்தில் பல ஆசனங்கள் அடிக்கடி காலியாகவே இருப்பதைக் காணலாம். வரவு - செலவுத்திட்ட விவாதத்தின் போது 'கோரம்' பின்பற்றப்படுவதில்லை. எனவே இந்த விவாதத்தின் போது சில சமயங்களில் ஒன்றிரண்டு பேர் தான் சபையிலிருப்பதைக் காணலாம். எனவே பாராளுமன்றத்தில் புதிய கலவானை எம். பி.க்கு ஆசனப்பிரச்னை இருக்கமுடியாதென்பது நிச்சயம்!

ஃ ஃ ஃ

கொழும்புத் துறைமுகத்தில் பெருந்தொகையான மோட்டார் வாகனங்கள் வந்திறங்கியிருக்கின்றன. துறைமுகத்தில் இதனால் இடநெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இவற்றைவிரைவாக எடுத்துச் செல்லாவிட்டால் அவற்றை ஏலத்தில் விற்க நேரிடுமென்று துறைமுகக்கமிஷன் தலைவர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இன்னும் இரண்டு கப்பல்களில் மோட்டார் வாகனங்கள் வந்து கொண்டிருக்கின்றனவாம்.

இப்பொழுதே வீதிகளில் நடமாட முடியாதவகையில் வீதிகளுக்கு அதிகமாக மோட்டார் வாகனங்கள் பெருகிவிட்டன.

வாகனங்கள் வந்து இறங்குவது போல் 'றெடிமேட்' வீதிகளும் வந்திறங்கினால் எவ்வளவு நல்லது!

# ஊர்சுற்றி

## இவர்களுக்கும் ரூ. 70 கிடைத்தது!

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 70 ரூபா சம்பள உயர்வு நல்லூர் ப. நோ. கூ. சங்க ஊழியர்களுக்கும் நவம்பர்மாதம் தொடக்கம் வழங்கப் பணிப்பாளர் சபை தீர்மானித்து வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

★ கமலம் கொலை வழக்கு:

# "2-ம் எதிரியை சாட்சியாகப்போட்டது தவறுதலாக நடந்துவிட்டது!"

## பொலிஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியம்

(நமது புலோலி நிருபர்)

''பிராதில் உள்ள வழக்காளியின் சாட்சிகள் பட்டியலில் 46 வது சாட்சியாக 2 ம் எதிரி போடப்பட்டிருப்பதும், எதிரிகள்மீதுள்ள கொள்ளைக் குற்றச்சாட்டில் காப்புகள் சேர்க்கப்படாததும், எதிரிகள்மீது களவு பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டு சுமத்தப்படாமல் இருந்ததும் தவறுதலாக நடந்துவிட்டன.''

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியம் அளித்த பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரா குணரத்தின நீதவானின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் கூறினர்.

1980 பெப்ரவரி 21 ம் திகதிக்கும் 22 ம் திகதிக்குமிடைப்பட்ட காலப்பகுதியில் பொலிகண்டி டியூட்டரி மாணவியான கமலம் இராமச்சந்திரன் (வயது 15) வராத்துப்பளை ஆலவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் வைத்துக் கொலை செய்தார்களெனவும், கொலையுண்ட மாணவி கமலம் அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையடித்தார்களெனவும், பருத்தித்துறை சின்னத் தோட்டத்தைச் சேர்ந்தவரும், கொலையுண்ட கமலத்தின் ஒன்றுவிட்ட சகோதரனுமான கந்தசாமி இராஜ்குமார் (ராஜன்) அவரது நண்பரான பொன்சியஸ் பெர்னண்டோ (ஜெமி) ஆகியோர்மீது குற்றம் சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1 ம், 2 ம் எதிரிகள்சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா ஆஜராகியிருந்தார்.

நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும், பொலிசார் சார்பில் சார்ஜண்ட் விவேகானந்தனும் பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவனருள்சுந்தரம் (காண்டீபன்) செல்விகள் சந்திரா சச்சிதானந்தம், உமா துரைசிங்கம், எல். சி. பிலிப் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

### இன்ஸ்பெக்டர் பதில்

தொடர்ந்து நீதவானின் கேள்விகளுக்குப் பதிலளித்த பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி சந்திர குணரத்தின குறிப்பிட்டதாவது:

நீத;- இவ்வழக்கின் பிராது உம்முடைய பெயரில் 9-5-80 அன்று அணைக்கப்பட்டது? - ஆம்.

நீத;- பிராதில் உள்ள வழக்காளியின் சாட்சிகள் பட்டியலில் 46வது சாட்சியாக 2ம் எதிரியின் பெயரை ஏன் போட்டீர்? தவறு நேர்ந்துள்ளது.

நீத;- எதிரி மீதுள்ள கொள்ளைக் குற்றச்சாட்டில் காப்புகள் ஏன் சேர்க்கப்படவில்லை? அதிலும் தவறு ஏற்பட்டுள்ளது.

நீத:- 9-5-80 அன்று தகவல் புத்தகத்தின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகளில் இரண்டு ஏன் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை? - அது 127 பக்கங்களைக் கொண்டிருந்தபடியால் தட்டெழுத்துச் செய்வதில் தாமதமேற்பட்டது.

நீத: இந்த வழக்கில் துரட்சி அணைப்பதாக நீர் எப்போ தீர்மானித்தீர்?-மே 5ம் திகதி.

நீத: மே 5ம் திகதி விசாரணைகள் பூர்த்தியடைந்துவிட்டனவா?-நான் அறிந்தவரையில் பூர்த்தியடைந்திருந்தது.

நீத: துரட்சி அணைப்பதற்கு முன்னர் விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன என அறிவித்தீரா?-இல்லை.

நீத: ஏன் அறிவிக்கவில்லை?- நான் அதை அவசியமெனக் கருதவில்லை.

நீத: இந்த வழக்கின் விசாரணையை நீர் செய்தீரா?- இல்லை.

நீத: எனவே வழக்கு விசாரணைகள் பூர்த்தியானது என உமக்குயார் தெரிவித்தார்கள்?- நான் தகவல் புத்தகத்தைப் பார்த்தும், விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரிகளுடனும் கதைத்தும் நானே விசாரணை பூர்த்தியானதெனத் தீர்மானித்தேன்.

நீத: நீர் தகவல் புத்தகத்தைப் பார்த்தபோது 3-4-80 அன்று 1ம் எதிரி சப்இன்ஸ்பெக்டர் இரத்தினசபாபதிக்கு கொடுத்த வாக்குமூலத்தைப் பார்த்தீரா?-ஆம்.

நீத: அதுஎப்படியானவாக்குமூலம்?-1ம் எதிரிதானேஅந்தக் கொலையைச் செய்ததாகவும், வேறு யாரும் அந்தக் கொலையில் சம்பந்தப்படவில்லை என்றும் கூறும் ஒப்புதல் வாக்குமூலம்.

நீத:- அந்த வாக்கு மூலம் 1ம் எதிரி முன்பு கொடுத்த வாக்குமூலத்திலும் வேறுபட்டதா? - ஆம்.

நீத; 1ம் எதிரி கொடுத்த முதலாவது வாக்கு மூலத்தில் 2ம் எதிரியும் இக்கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டார் எனக் கூறியுள்ளாரா? -ஆம்.

### உண்மையான வாக்குமூலம்

நீத:- இந்த இரண்டு வாக்குமூலங்களிலும் எது 1ம் எதிரியின் உண்மையான வாக்குமூலமென வைகாசி 5ம் திகதி நீர் கண்டு பிடித்தீர்? 1ம்எதிரி 4-3-80 ல் கொடுத்த முதலாவது வாக்குமூலமே உண்மையானதென நினைத்தேன்.

நீத: அப்படியாயின் 3-4-80 அன்று கொடுத்த வாக்குமூலம் உண்மையற்றதா? 3-5-80, 1ம் எதிரி கொடுத்த இரண்டாவது வாக்கு மூலம் பற்றி நான் எண்ணிப்பார்க்கவில்லை.

நீத: 3 - 5- 80 ல் 1ம் எதிரி கொடுத்த வாக்கு மூலம் உண்மையானதா அல்லது உண்மையற்றதா எனத் தீர்மானிக்காமல் இந்த விசாரணை பூர்த்தியாகிவிட்டது என்ற முடிவுக்கு ஏன் வந்தீர்? - இரண்டு எதிரிகளும் கொடுத்த வாக்குமூலங்களை நான் ஆராய்ந்து பார்த்தேன். அவர்களுக்கெதிராக மேற்கொண்டு சாட்சியமேதும் கிடைக்கவில்லை எனவேவழக்கு தாக்கல் செய்ய முடிவு செய்தேன்.

நீத: மேற்கொண்டு சாட்சியம் கிடைக்காதபடியால் நீர் விசாரணை பூர்த்தியாகவில்லை என்று தீர்மானித்திருக்கவேண்டும்? - வழக்கை இயன்றளவு கெதியில் தாக்கல் செய்யும்படி மேலிடத்திலிருந்து உத்தரவு கிடைத்தது.

நீதவான்: கமலம் இறந்தபோது வயதென்ன? நான் அதைப்பற்றி ஆராயவில்லை.

நீத: கமலத்தின் வயதுபற்றி தாயாரிடம் விசாரித்தீரா?ஆம்.

### கமலத்திற்கு 15 வயது

நீத: தாயார் எத்தனை வயதென்று கூறினர்? 15 சொச்சமென்று.

நீத: எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் தயாரிப்பதற்கு இறந்த பெண்ணின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தைஎடுத்தீரா? நான் எடுக்கவில்லை. தாயார் கூறியபடி 15 க்கு கூட(15+) என அறிந்தேன்.

நீத: இறந்த பெண்ணிற்கு 15 வயது என்று அறிந்ததும் அந்தப் பெண்ணைக் கடத்திக்கொண்டு போயிருக்கலாமென்று நீர் கருதவில்லையா? அந்தப்பெண் டியூடறியிலிருந்து வீடு திரும்பும்போது அவரது ஒன்றுவிட்ட சகோதரன் கூட்டிக்கொண்டு போனதாக இருந்தது.

நீத: அந்த ஒன்றுவிட்ட சகோதரன்தான் 1-ம் எதிரி? -ஆம்.

நீத: அந்த எதிரி இளம் பெண்ணைக் கடத்திக்கொண்டு சென்றதாக ஏன் நீர் கருதவில்லை? பதிலில்லை.

நீத; எதிரிகளில் யாராவது ஒருவர்மீது களவு பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டைச் சாட்டுவதுபற்றி ஏன் நீர் யோசிக்கவில்லை? அது தவறுதலாக நடந்துவிட்டது.

நீதவான்: இந்தக் கொலையைப்பற்றி விசாரணை செய்த பொலிஸ் அதிகாரிகள் நேர்மையாகவும், முறையாகவும், முழுமையாகவும் விசாரணை செய்யவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறீரா? என்னைப் பொறுத்தமட்டில் அவர்கள் நேர்மையாகவும், முறையாகவும் முழுமையாகவும் செயற்பட்டிருக்கிறார்கள் என நான் கருதுகிறேன்.

மேல் விசாரணை இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது.

---

# திருப்பணிச்சபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மாரும்புலம் பிள்ளையார் கோயில் பாலஸ்தாபனம் எதிர்வரும் ஜனவரியில் நடைபெறவிருப்பதால், அதற்கான திருப்பணிச்சபை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

திருவாளர்கள்: சின்னையா பாபநாசசிவம், சி. கணேசமூர்த்தி, பி. வேலாயுதம், சி. இராசநாயகம், எஸ். சிவராஜலிங்கம், கே. சுந்தரலிங்கம், ஏ. கந்தசாமி, சுப்பையா, நாகமணி ஆகியோர் திருப்பணிச்சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். திருப்பணிச்சபைக் கூட்டம் நடைபெற்றபோது, கொழும்பிலிருந்து கலைஞர்களை வரவழைத்து பொங்கல் தினத்தன்று கலைநிகழ்ச்சிகள் நடாத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (கொ)

---

# "கலை, இலக்கியங்கள் அனுபவ வெளிப்பாடே"

## "அலை" விமர்சனக்கூட்டத்தில்கருத்து

(யாழ்ப்பாணம்)

''கலை, இலக்கியங்கள் அனுபவ வெளிப்பாடு என்பதுடன் நான் உடன்படுகின்றேன். என்னுடைய வாழ்க்கை அனுபவங்களையே நான் விரும்புகின்றேன். எமது இலக்கியக் கர்த்தாக்களின் படைப்புகளிற் காணப்படும் அழகியற் குறைபாடுகளிற்கு குறித்த ஒரு விமர்சகரது வழிகாட்டுதல் முக்கிய காரணமாகும். இவரது பிழையான வழிகாட்டுதல்கள் எழுத்தாளர்கள் பலரைப் பழுதாக்கியுள்ளது. 'அலை'யின் படைப்புக்களுடன் பெரும்பாலும் உடன்பாடும் சில மாறுபாடுகளும் எனக்கு உண்டு.

யாழ். பொண்ட் நிறுவனத்தில் நடைபெற்ற 'அலை' சஞ்சிகையின் விமர்சனக் கூட்டத்தில் விமர்சன உரை நிகழ்த்துகையில் எழுத்தாளர் திரு. நந்தினி சேவியர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. ஆ. சபாரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. அவர் தனது தலைமை உரையில் ''சிலரால் அசத்தியத்தை, குறைகளை, போலிகளை சகிக்க முடியாது, வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்குப் போய்விடுவார்கள். மந்தமதி படைத்தோர் அதிகம் அறிந்ததாகக் காட்டிக்கொண்டால், நுணிப்புல் மேய்வோர் எல்லாம் அறிந்தவர்கள் என வேஷம் போட்டால் அவர்கள் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள். அது அவர்களது மனோதர்மம். 'அலை' வட்டத்தில் இப்படியானவர்கள் அதிகம் இருக்கின்றனர். 'அலை'யின் ஐந்து வருட காலச் சாதனையைப் பார்க்கையில் நாம் பெருமைப்படலாம்'' எனக் குறிப்பிட்டார்.

''தமிழர்களின்பிரச்னைகளைக் கலைப் படைப்புகளாவும், கட்டுரைகளாகவும் வெளிப்படுத்துவதில் 'அலை'யே முன்னோடியாக அமைந்துள்ளது. இதன் தாக்கத்தில்தான் வேறு சில இலக்கியச் சஞ்சிகைகளும் இப்போது இவற்றை வெளியிடத் தொடங்கியுள்ளன. பல நல்ல கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் என்பன 'அலை' இதழ்களில் வந்துள்ளன. பல விதங்களிலும் இலக்கிய உலகில் 'அலை' முக்கிய இடத்தை வகிக்கின்றது'' என்று திரு உ. சேரன் தமது விமர்சன உரையில் குறிப்பிட்டார்.

இக் கலந்துரையாடலில் ஜ ப் நுஃமான், திருவாளர்கள் நித்தியானந்தன், மௌனகுரு. முத்துலிங்கம், நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர் பங்குபற்றினர் இறுதியில் 'அலை' சார்பில் அதன் இணையாசிரியர்களான திரு. அ. யேசுராசா, மு. பொன்னம்பலம் உரையாற்றினர்.

---

## 6—ம்...

(4- பக்கத் தொடர்ச்சி)

லாப் பிள்ளைகளுக்கும் பொதுத் தேர்வை நடாத்தி கல்விப் பணிப்பாளர் அவர்களே பிள்ளைகளைத் திறமையடிப்படையிற் தெரிவு செய்து அந்தந்தக் கல்லூரிகளுக்குப் பெயர்ப் பட்டியலை அனுப்புவது பற்றி ஆலோசிக்கலாமல்லவா?

கல்வித் திணைக்களத்தினரும் பிரபல கல்லூரியதிபர்களும் ஒன்று சேர்ந்து பாரபட்சமின்றித் திறமையடிப்படையில் பிள்ளைகள் பாதிக்கப்படாத வகையில் இனிமேலாவது நடந்து கொள்வார்களென எதிர் பார்க்கிறோம்.

வே. நா. நடராசா
கைதடி நுணாவில்
சாவகச்சேரி


நெல்லைப்

பாதிக்கும் கிருமிகளைக் கொன்று விளைச்சலைப் பெருக்குங்கள்



பாவியுங்கள்.

BASF பொபக்தியன (450 மி லீ) ரூ 39 50

மக்ஹூடஸ காபோபியூறன் (2 கி. கிராம்) ரூ. 33.00

மக்.:.பொஸ (450 மி.லீ.) ரூ. 80.00

பரத்தயன் (450 மி லீ.) ரூ. 40.00

பிலாட்றின் (450 மி லீ.) ரூ. 80.00

மக்ஹூட்ஸ் லிமிட்டெட்
297, யூனியன் பிளேஸ் கொழும்பு 2
தொலைபேசி: 32941-5


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# டாக்டர்கள் பற்றாக்குறை; பர்மா அரசு மட்டும் டாக்டர்களை அனுப்பியது!

## சுகாதார அமைச்சர் தகவல்

(மன்னார்)

''இலங்கையில் டாக்டர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. டாக்டர்கள் எல்லோரும் வெளி நாடுகளுக்குச் சென்றுவிடுகிறார்கள். முன்பெல்லாம் ஒரு சிலரே வெளி நாடுகளுக்குச் சென்றனர். இப்போது அதிகளவில் செல்கிறார்கள்.''

இவ்வாறு மன்னார் அரசினர் ஆதார வைத்திய சாலையில் நடைபெற்ற மக்கள்தினவிழாவில் சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா கூறினார்.

வவனியா சுகாதார அத்தியட்சகர் திரு. க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மன்னார் எம். பி. திரு. பி. எஸ் சூசைதாசன், மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ, மன்னார் மாவட்ட அமைச்சின் பிரத்தியேகச் செயலாளர் ஜனாப் அக்பர், சுகாதார அமைச்சின் செயலாளர் திரு பி சி பெரேரா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜெயசூரியா அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''எமது நாட்டிற்குத் தேவையான டாக்டர்களைப் பெறுவதற்கு நாம் வெளிநாடுகளின் உதவியைக் கோரினோம். பர்மா அரசாங்கம்மட்டும் சில டாக்டர்களை எமக்கு அனுப்பியுள்ளது. எமது நாட்டில் டாக்டருக்கும் படித்துவிட்டு வெளி நாட்டில் பரீட்சை எழுதுவோர் சித்தியடைந்துவிடுகின்றனர். ஆனால் வெளி நாட்டில் டாக்டருக்குப் படித்துவிட்டு எமது நாட்டில் பரீட்சை எழுதுவோர் சித்தியடைவது மிகவும் குறைவு. இதிலிருந்து எமது நாட்டில் கல்வி எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். உலகத்திலேயே எமது நாட்டில்தான் கல்வி வளர்ச்சியடைந்துள்ளது.

மன்னார் எம். பி. மன்னார் வைத்தியசாலைக்குத் தேவையான இரு வசதிகளை செய்து தரும்படி கேட்டுள்ளார். ஒன்று சகல வசதிகளும் அடங்கிய பிரேத அறை. இரண்டாவது ஈ. சி. ஜி. கருவி சகல வசதியும் அடங்கிய பிரேத அறைக்கு 95 ஆயிரம் ரூபா தேவை. அப்பணத்தை நான் எந்த வழியிலாவது விரைவில் ஒதுக்கீடு செய்வேன். கூடிய விரைவில் ஈ. சி. ஜி. கருவியை அனுப்ப ஏற்பாடு செய்வேன்.

இந்த வைத்தியசாலை துப்பரவாக இருக்கிறது. பொது மக்களின் நன்கொடைகளிலும், சிரமதானங்களினலும் பல அபிவிருத்திகள் செய்யப்பட்டுள்ளது. இதனையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் முன்னேற சுகாதாரம் மிகவும் அவசியம். ஒரு நாட்டின் சுகாதாரம் வளர்ச்சியடைய போதிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும்.

நான் சுகாதார அமைச்சைப் பொறுப்பேற்றபோது பல வசதிக் குறைவுகள் இருந்தன. மருந்து தட்டுப்பாடு, வைத்திய உபகரணங்கள் போன்ற பல தட்டுப்பாடுகள் இருந்தன. நான் அமைச்சைப் பொறுப்பெடுத்ததும் மருந்துவகைகள் வைத்திய உபகரணங்கள் என்பவற்றைப் பெற்று சகல வைத்திய சாலைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளேன்.

சில வைத்தியசாலைகளில் பல வைத்திய உபகரணங்கள் சுமார் 15 அல்லது 20 வருட பழமை வாய்ந்தவைகளும் உண்டு. கூடிய விரைவில் அவற்றை மாற்றி அமைப்பேன்.

இப்போது எந்த ஆஸ்பத்திரியிலும் மருந்துத் தட்டுப்பாடு இல்லை. டாக்டர்களுக்கும், தாதிமாருக்கும்தான் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அவற்றையும் நாம் விரைவில் நீக்கிவிடுவோம்'' என்றார்.

---

### பனஞ்சீனி உற்பத்தி:

## பணம் ஒதுக்குமாறு எம்.பி.க்களிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''பனஞ்சீனி, வெல்ல உற்பத்திக்கான செலவீனம் 20 லட்சம் ரூபாவை, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து வட பகுதி எம். பி க்கள் ஒதுக்கித் தரவேண்டும்.''

இவ்வாறு வடபகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம் வடபகுதியிலுள்ள சகல எம். பி. க்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி சங்கம் விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

''1981-ம் ஆண்டு செயற்படவுள்ள பனஞ்சீனி, பனைவெல்ல உற்பத்திக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள செலவீனம் 20 லட்சம்ரூபாவாகும். இப்பணத்தை ஈடுசெய்யும் வகையில் வட பகுதி எம். பி. க்கள் 81-ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து அப்பணத்தை ஒதுக்கித் தரல வேண்டும். மேற்படி பணத்தை ஒதுக்கித் தருவதன் மூலம் வடபகுதியிலுள்ள பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும்.'' (கொ)

---

## தந்தை கண்டித்ததால் மனமுடைந்த மகன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தந்தை கண்டித்ததால் மனமுடைந்த மகன் ஒருவர் நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

ஊரெழு வடக்கைச் சேர்ந்த வயிரமுத்து துரைரத்தினம் (23 வயது) என்பவரின் மரணவிசாரணையில் மேற் கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரின் தந்தையான சின்னட்டி வயிரமுத்து மரணவிசாரணையில் கூறியதாவது: இறந்தவர் எனது மூத்தமகன். இவருக்குப்பின் ஐந்து பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள். எனது மகனுக்கு வயிற்றில் ஏற்பட்ட நோயினால் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் யாழ். ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது.

நான் ஊரில் தோட்டம் செய்கிறேன். கூலி வேலைக்கும் போவேன். சென்ற திங்கட்கிழமை காலை நான் கூலிவேலைக்குப் போனேன். போகும்போது எனது மகனை அழைத்து தோட்டத்திற்குப்போய் வேலை செய்யுமாறு கூறிவிட்டுச் சென்றேன் வேலைமுடிந்து மாலை 7 மணியளவில் எமது தோட்டத்திற்குச் சென்று பார்த்தேன். எனது மகன் தோட்டத்திற்குச் சென்று வேலை செய்யவில்லை என்பதை அப்போது அறிந்தேன்.

தோட்டத்திலிருந்து வீட்டிற்குச் சென்று ஏன் வேலை செய்யவில்லை எனக் கேட்டு அவரைக் கண்டித்துப் பேசினேன் அதனால் எனது மகன் மிகவும் வேதனையடைந்தவராகக் காணப்பட்டார். என்மகன் நச்சுத்திராவகத்தை எடுத்துக் குடித்துவிட்டு ஓலமிட்டார். உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசென்று அனுமதித்தேன். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இரவு 10 மணியளவில் எனது மகன் இறந்துவிட்டார்.

மரணவிசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (கொ-க)

---

## கடலில்விழுந்த பரீட்சை மேற்பார்வையாளா

(யாழ்ப்பாணம்)

அனலைதீவில் க. பொ. த. (சாதாரண) பரீட்சையின் விடைத்தாள்களைச் சேகரித்துக் கொண்டு திரும்பிய பரீட்சை மேற்பார்வையாளரொருவர் விடைத்தாள்களுடன் தவறிக் கடலில் வீழ்ந்தார்.

சுமார் பத்து நிமிடங்கள்வரை கடலில் தத்தளித்த இவர் தனது சாதுரியத்தினால் விடைத்தாள்களுக்கு எவ்வித சேதமும் ஏற்படாதவாறு பாதுகாத்துக்கொண்டார்!

இச்சம்பவத்தின்போது இவரின் மூக்குக்கண்ணாடி மட்டும் கடலில் தொலைந்துவிட்டது. (வெ)

---

## 'இனப்பற்றை வெளிக்காட்டி செயல்பட்டவர் தனிநாயகம் அடிகளார்'

### பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் அஞ்சலி

(பேராதனை)

''தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளிடம் ஆழ்ந்த அறிவும் தமிழ்ப் பற்றும் காணப்பட்டதால்தான் தமிழ் தெரியாத மலேசிய அரசாங்கத்தின் ஆதரவுடன் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை அங்கு நடத்த முடிந்தது. தனிநாயகத்தை விட முன்னும் பின்னும் வல்லவர் பலர் இருந்தபோதும் பல துறைகளையும் ஒன்று சேர்த்து உலக அரங்கில் ஒரு தமிழ் ஆராய்ச்சியைத் தொடக்கி வைத்த பெருமை இவருக்கே உரியது இவர் தனக்குக் கிடைத்த கொடையை ஒரு பணியாக மதித்து தமிழுக்கு பணி செய்ய விழைந்தார். வவனியாவை மதவாச்சியுடன் இணைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உடனடியாக ஒரு பொதுக்கூட்டம் கூட்டும்படி மிகவும் உணர்ச்சியுடன் கூறி தமது இனப்பற்றை வெளிக்காட்டியவர் தனிநாயகம்அடிகளார். நிலம் பாதுகாக்கப்பட்டால்தான் இனம்வாழும்; இனம் வாழ்ந்தால்தான் மொழி, பண்பாடு, கலை கலாசாரம் வாழும். இதனை தமிழ் உலகம் அறியப் பாடுபட்டவர்தான் பேராசிரியர் தனிநாயகம்.''

இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் முதல் நிகழ்ச்சியான தனிநாயக அடிகளார் அஞ்சலிப் பெருவிழாவில் ஜோசப் மேரி அடிகளார் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

அம்பிட்டியா ஞானப்பிரகாசர் கழகமும், பிலிமத்தலாவை தமிழ்க் கழகமும் இணைந்து நடாத்திய அஞ்சலி விழாவுக்கு தமிழ்ச் சங்கத்தலைவர் திரு கி. செல்வராசா தலைமை வகித்தார். தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. வேலுப்பிள்ளை அறிமுக உரை வழங்கினார். விழாவில் அண்மையில் காலஞ்சென்ற இந்திய தமிழறிஞர்கள் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மயிலை சீனி வேங்கடசாமி ஆகியோருக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இவ்விழா புவியியல் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதான நூலகத்தில் தனிநாயக அடிகள் பற்றியும் புத்தகக் கண்காட்சி நடைபெற்றது.

சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. அ. சிவராசா, பிலிமத்தலாவை இறையியல் கல்லூரி அதிபர் வண. பிதா டாக்டர் கனகரத்தினம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். இறுதியில் சங்கத்தின் பொதுச்செயலாளர் ந. சண்முகப்பிரபு நன்றிக் கவிதை வழங்கினார்.

தமிழ்ச் சங்கத்தினை இம் மாதம் 4-ம் திகதி பொறுப்பேற்ற புதிய நிர்வாகக் குழுவினரின் முதல்விழாவாக தனிநாயக அடிகளின் அஞ்சலி விழா இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. புதிய நிர்வாகக் குழு விபரம் வருமாறு:

தலைவர்; கி: செல்வராசா (பொறியியல் பீடம்), உபதலைவர்: அ. முருகானந்தா (விவசாயம்), செயலாளர்: ந. சண்முகப்பிரபு (விவசாயம்), பொருளாளர்: வி. விஜயகுமாரன் (பல்வைத்தியம்), பத்திராதிபர்: பூ. காசிநாதன் (மிருக வைத்தியம்) குழு உறுப்பினர்கள்: ஏ, எஸ். புகாரிஅகமட், அ. சியாமளராஜ், செல்வி நாகேஸ்வரநாயகி வன்னியசிங்கம், (விஞ்ஞானம்) செல்வி ராமினி (பல்வைத்தியம்)

---

### மா. அ. சபையினுல்

## தமிழ்ஈழம் கிடைக்குமா?

(சித்தன்கேணி)

''சாதி மதபேதமற்ற சுதந்திர தமிழ்ஈழமே எமது இலட்சியம் என்று மக்களை மயக்கியவர்கள பாராளுமன்றம் செல்லவேண்டும் என்ற தமது இலட்சியத்தை நிறைவேற்றிக் கொண்டார்கள். இந்த நாட்டில் சோசலிசத்தை ஏற்றுக்கொள்வதாக மேடைகளில் முழக்கமிடுபவர்கள் மறுபுறத்தில் ஜே. ஆருடன் ஒட்டி உறவாடுகிறார்கள். மாவட்ட அபிவிருத்திசபைகளை ஏற்று நிற்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் தமிழ்ஈழத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்றுக் கொடுக்க முடியுமா?

இவ்வாறு காரைநகர் சைவ மகாசபை மண்டபத்தில் மூன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலை தமிழ் மக்கள் ஏன் பகிஷ்கரிக்கவேண்டும் என்ற நூல்வெளியீட்டு விழாவில் பேசிய திரு. நாவேந்தன் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசியதாவது;-

''நாட்டுப் பத்திரிகைகளில் தமிழ்ஈழப்பிரகடனம் செய்துவிட்டு இங்கு மாவட்ட அபிவிருத்திச்சபைகளை ஏற்று நிற்பதனால் தமிழ் ஈழம் கிடைத்துவிடுமா? என்றார்

முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி திரு. ஆ. தியாகராசா பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் 1978ல் நடாத்திய மே தினக்கூட்டத்தில் தலைவர்கள் அடுத்த மே தினக்கூட்டம் தமிழ் ஈழத்திலே தான் நடைபெறும்என்றனர் ஆனால் அதன் பின்னர் இரண்டு மே தினக்கூட்டங்கள் நடைபெற்றும் தமிழ் ஈழம் என்ற பேச்சைக் கேட்கமுடியாமல இருக்கின்றது'' என்றார்.

---

## கிளாலியின் சமூகஜோதி



எழுதுமட்டுவாளிலுள்ள கிளாலி பகுதியில் தோன்றிய அமரர் வஸ்தியாம்பிள்ளை வரப்பிரகாசம் கிராம விதானையாராக 35 வருடங்களுக்குமேல் பணிபுரிந்தார். சமூக, சமய, குடும்ப பணிகளில் ஒளிகான்ற பொன்விளக்கு. மக்கள் பணிக்கே தியாகம் செய்த இவர் அமரரான 31வது நாள் இன்று வெள்ளிக்கிழமை நினைவுகூரப் படுகிறது.

இவர் விதானையார் பதவிக்கு நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து அதிகாரத்தைப் பயன்படுத்தாது அன்பையே இலக்கணமாகக்கொண்டு கடமையாற்றினார்.

கிராம விதானையார் பதவியுடன் கூட்டுறவு அமைப்பின் பண்டகசாலைக் காலத்திலேயே அதன் தலைவராகப் பணிபுரிந்து பாராட்டைப் பெற்றவர். கிராம அபிவிருத்திச் சங்கம், பயிர்ச்செய்கைக் குழு, சன சமூக சேவைகளில் இவர் முக்கிய பதவிவகித்தார்.

கிளாலி புனிதயாகப்பர் ஆலயம், புனித மிக்கேல் ஆலயங்களின் பிரதான பரிபாலகராக சிறப்புற பணிபுரிந்து, இறை சேவைக்கு இலக்கணமாய் திகழ்ந்த இவர் தமிழ்க்கலைக்கும் தனை அர்ப்பணித்தார். நாட்டுக்கூத்துக் கலைஞரான இவர் நாட்டுக்கூத்தினை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்டவர் இவர் மேடையேற்றிய பல நாடகங்களில் சிறப்பாக மத்தேசு பவுரம்மா, ஞானசௌந்தரி, தர்மபிரகாசன் போன்றவை மக்களின் இதயத்தில் அழியா இடத்தைப் பெற்றுள்ளன.

இவர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னும் மக்களுக்குப் பணிபுரிந்து வாழ்ந்தார்.

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி10-30, 2-00, 6-00 & 9 30
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**ராணி** - (யாழ்:நகர்)
தினசரி 10-30, பி. ப. 2-15, 6-00, இரவு 9-30
**ஒரு தலை காதல்**
(குடும்பப் பெண்ணின் கதை)

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
வெற்றிகரமான 2-வது மாதம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணக்கலர்)

LAST FEW DAYS ONLY
**SANTHI** (JAFFNA DAILY 4 SHOWS
10-30, 2-30, 6-30, 9-30
★ LEE. MARVIN. ★ CHARLS BROWNSON
★ JIM BROWN
**"THE DIRTY DOZEN"**

**வின்ஸர்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, இரவு 9-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா-ஆனந்தன்
**தனிப்பிறவி** (புதிய பிரதி)

**ராஜா** (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
இமயம் முதல் குமரிவரையுள்ள பல நூற்றுக் கணக்கான புனித ஸ்தலங்களை உள்ளடக்கியதும், தனக்கேற்பட்ட துன்பங்களை தூசியென எண்ணி தான்கொண்ட தெய்வபக்தியே மேல் என நினைத்த ஒரு பக்தனின் கதைதான் 'சுப்ரபாதம்.'
என்றுமில்லாதவாறு காட்சிக்கு காட்சி ஜனத்திரள் நிறைந்து காட்சியளிக்கிறது.
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர்.விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்
**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
யாழ்ப்பாணம்

செவன் ஆர்ட்ஸ் அளிக்கும்
**ஒருதலை காதல்**
ஒரு குடும்பப் பெண்ணின் உணர்ச்சிப் போராட்டம்


# இன்றைய பலன்

கார்த்திகை மாதம்
4-ந் திகதி வெள்ளிக்கிழமை
(19-12-80)

மேடம்; எண்ணத்தின் தாக்குதல் நெஞ்சத்தைப் புண்ணாக்கும், அற்ப விடயத்திற்குக்கூட பொல்லாங்கு கேட்க நேரிடும், தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள், சீறிவரும் கோபத்தை அடக்கவும்.

இடபம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் புதிர்போல் வாழ்க்கையில் சோர்வுக்கும் இடமுண்டு.

மிதுனம்; பிரச்சனைகள் பல இன்று நல்ல முடிவை அடையும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பேச்சில் நிதானம் பெருமையைத் தரும்.

கடகம்: சூழ்ச்சியின் உச்சக்கட்டம் வேதனையில் வீழ்த்திவிடும், ஆழ்ந்த சிந்தையுடன் காரியத்தில் கண் வைப்பீர்.

சிங்கம்: அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும், ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும், படித்தவர்கள் ஆதரவும் உண்டு.

கன்னி: இதயம் இன்பத்தால் விம்மும், இல்லத்திலும் இனிமை தவழும். உறவினர்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும், புத்திரவழியாலும் புகழ்வந்து சேரும், தெய்வத்தின் துணையும் கிடைக்கும்.

துலாம்: கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும், எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம், எதிலும் ஏமாற்றம் தென்படும், அரசபயத்துக்கு இடமுண்டு, எனவே அடக்கத்துடன் நடிக்கவும்.

விருச்சிகம்; குடும்பத்தில் அமைதியான சூழ்நிலை தென்படும், பிரமச்சாரிகளின் வாழ்வில் காதல் அரும்பும், நல்ல நாள்.

தனுசு: நண்பர்கள் தொல்லையாலே நலிவுகள் தோன்றக் கூடும், பண்புகள் பறந்து போகும், பரதேசிக் கோலமாகும்.

மகரம்: பந்துசனங்களின் கொண்டாட்டங்களுக்கும் இடமுண்டு, பெரியோர்கள் ஆதரவுக்கும் இடமுண்டு, எதிர்பாராத பொருள்வரவும் கிடைக்கும்.

கும்பம்: பதவியில் இருப்பவர்களுக்கு உயர்வு கிடைக்கும், சிலருக்கு புதிதாகவும் தொழில் கிடைக்கும், வெளியிடத் தொடர்புகள் வளர்வதற்கு இடமுண்டு.

மீனம்: உண்மைவழிநின்று உயர்வடைவீர்கள், மேலதிகாரிகளின் நம்பிக்கை உங்கள் மீது பதியும், எதிர்பாராத அதிர்ஸ்டலாபங்களுக்கும் இடமுண்டு

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல8 அ-பிரிவுகள் 524, 532)
யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற கோப்பாய் தெற்கு சரவணமுத்து இரத்தினம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்;

மரணமெய்தியவர்
சண்டிலிப்பாய் சரவணமுத்து நாகராசா,
மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் ) இல. 3293

பேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தைஎண்பிப்பதற்காக/ நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981 ஆம் ஆண்டு தை மாதம் 9 ஆந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்..

நீதிமன்றக் கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

1980 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

7676

## இளாலியின்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த சமூக ஜோதியாக வாழ்ந்துகாட்டிய இப்பெரியாரை இழந்தது பேரிழப்பாகும்.

இவரின் ஆன்மா இளைப்பாற்றிற்காக இளாலி புனிதயாகப்பர் பேராலயத்தில் 20ம் திகதி சனிக்கிழமை மாலை, பங்குத் தந்தை வணபிதா ஜோஜண் பிரான்ஸிஸ் அடிகளால் திருவிரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப் படவிருக்கிறது.

—ரேச் துரையப்பா

## மகாஜனன்ஸ் வெற்றி

(மாவிட்டபுரம்)

பேருவளை 'சன்றைஸ்' விளையாட்டுக்கழகமும், தெல்லிப்பளை மகாஜனன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதிய சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனன்ஸ் வெற்றியீட்டியது.

காங்கேசன் துறை யங். ரேயல் விளையாட்டுக்கழக ஆதரவில் காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் இம் மோதல் நடந்தது (க)

## விசாரணை ஒத்திவைப்பு

(மாவிட்டபுரம்)

சங்கானைப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் மீது தொடரப்பட்ட தாக்குதல் வழக்கின் விசாரணை ஏப்ரல் 7ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் சார்ஜண்டாகக் கடமையாற்றிய கிருஷ்ணர் குலசிங்கம், கான்ஸ்டபிளாகக்கடமையாற்றிய விஜயசுந்தரா ஆகியோர் மீது சங்கானையைச் சேர்ந்த சபாரத்தினம் இராசேந்திரன் என்பவரைப்பொல்லால் தாக்கி படுகாயம் விளைவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுத்தொடரப்பட்ட வழக்கு, மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுக்கப்பட்டது.


**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**நினைத்தாலே இனிக்கும்**

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஸ்வரராவ்-சாவித்திரி
**தேவதாஸ்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
எம். ஜி. ஆர். - சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**வெ ஸ் லி** (மானிப்பாய்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி-சாரதா
**ஞானஒளி**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
**ஞானக்குழந்தை**


## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு: 567/89

சின்னத்தம்பி குமாரசாமி,
வேலணை கிழக்கு, வேலணை. — வழக்காளி

எதிராக

(1) கதிரவேலு பேரம்பலம்,
(2) பெண் அன்னம்மா இருவரும்
வேலணை கிழக்கு, வேலணை. — எதிராளிகள்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் MB/567/89ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1981ம் ஆண்டு தைமாதம் 9-ம் திகதி (9-1-1981) வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 2210/-வும் மேலும் ரூபா 1300/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 18% வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1977-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1978-ம் ஆண்டு ஆனி மாதம் 22-ந் திகதிவரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5% வீதவட்டியும் வழக்குச் செலவு ரூபா 495-95 சதம் கொடுக்கவேண்டியிருப்பதாலும்

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவப்பகுதி வேலணைக் கோவிற்பற்று வேலணை கிழக்கிறை மணற்தோட்டம் நிலப்பரப்பு 6 1/8 ஆறேயரைக்காலும் பனைவடலி, தென்னம்பிள்ளைகளும். எல்லை கிழக்கு: ரேட்டு. வடக்கு: இராசரத்தினம் பெண் சிவபாக்கியத்துக்குரிய வாதனம். மேற்கு: கந்தன் நாகமுத்துவின் ஆதனம். தெற்கு: ஐயனார் கோயிலாதனம். இதடங்கலிற் சொரியலாய் ½ கரைவாசியுமதற்குரியவைகளும்.

சி. செ. பாலசிங்கம்,
கொமிஷனரும் - மதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை, 9-12-1980.

7675

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை நூல்கள்

| | |
|---|---|
| பிள்ளையார் கதை - | 3 00 |
| பிள்ளையார் புராணம் உரையுடன் - | 2.50 |
| விநாயகர் தோத்திர மாலை - | 2.50 |
| விநாயகர் அகவலும் கவசமும் - | -50 |
| மார்கழிப் பாராயணம் - | 2.00 |

**காந்தளகம்**
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



# ஈழநாடு
The Eelanaadu 60 சதம்


### அன்பளிப்பு

யாழ்ப்பாணம்) நல்லூர் ப. நோ. கூ. சங்க கூட்டுறவு மகளிர் குழுவின் சிறுவர் மகளிர் நூல் நிலையத்திற்கு நூல்களும், மகளிர்பன்னவேலை செய்வதற்கு, ஓலை சீவுவதற்கான சிறிய யந்திரம் ஒன்றையும் மில்க்வைற் தொழில் அதிபர் திரு. க கனகராசா அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

### நீதிமன்ற விடுமுறை

(மாவிட்டபுரம்)
மல்லாகம் மாவட்ட நீதிமன்றமும் ஆரம்ப நீதிமன்றமும் பருவகால விடுமுறையையொட்டி இம்மாதம் 20 ம் திகதி மூடப்படுகின்றன. நீதிமன்றம் மூடப்படுவதுபற்றி இரு நீதிமன்ற நீதிபதிகளும் அறிவித்துள்ளனர்.

மீண்டும் ஜனவரி 5ம் திகதியிலிருந்து நீதிமன்றங்கள் இயங்க ஆரம்பிக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழாராய்ச்சி மகாநாடு ஒத்திவைக்கப்படுமா?

சென்னை, டிச. 18

**மதுரையில், ஜனவரி மாதம் நான்காம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு ஒத்திவைக்கப்படுமா?**

**பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இம்மகாநாட்டில் கலந்துகொண்டு, ஆரம்பித்துவைக்கும் பட்சத்தில் இம்மகாநாடு ஒத்திவைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

**ஐந்தாவது** அனைத்துலகத்தமிழாராய்ச்சிமகாநாடு அடுத்தமாதம் ஐந்தாம் திகதிமதுரையில்ஆரம்பமாகிறது. ஜனவரி மாதம் பத்தாம் திகதிவரை இம்மகாநாடு நடைபெறும்.

**தமிழக** முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கடந்தவாரம் புதுடில்லி சென்று பிரதமர் திருமதி இந்திராகாந்தியைச் சந்தித்தார். அப்பொழுது, மதுரை மகாநாடு பற்றியும் அவரிடம் பிரஸ்தாபித்து, இம்மகாநாடு, உலகத் தமிழர்களின் மகாநாடாக அமைவதால் அவசியம் இதில் கலந்துகொண்டு மகாநாட்டை ஆரம்பித்துவைக்க வேண்டும் என்று அழைப்பும் விடுத்திருந்தார்.

**இதுபற்றி** சென்னை திரும்பிய தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நிருபர்களிடம் பேசுகையில்; ஜனவரி மாதம் நான்காம் திகதி முக்கிய நிகழ்ச்சிகள் இருப்பதால், அன்றையதினம் தமக்கு கலந்துகொள்ள முடியாது என்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி தம்மிடம் தெரிவித்து; நான்காம் திகதிக்குப் பின்னர் என்றால் தாம் கலந்துகொள்ள முடியும் என்று கூறினார் என்றும்; ஜனவரி முதல்வாரத்தில் பிரதமர் கலந்துகொள்வதானால் இம்மகாநாட்டை இரண்டு மூன்று தினங்கள்வரை ஒத்திவைக்க தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

**ஜனவரி** நான்காம் திகதிக்குப் பின்னர் முதல்வாரத்தில் ஏதோ ஒருநாளில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மாநாட்டை ஆரம்பிக்க மதுரை வருவாரானால் அந்தத் திகதிவரை தமிழாராய்ச்சி மகாநாடு ஒத்திவைக்கப்படலாம் எனத்தெரியவருகிறது. அதேநேரத்தில் ஜனவரி முதல் வாரத்தில் பிரதமர் கலந்துகொள்ள வாய்ப்பில்லாவிட்டால் தமிழாராய்ச்சி மகாநாடு திட்டமிட்டப்படி ஜனவரி மாதம் நான்காம் திகதி ஆரம்பமாகும் என்று மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

## தங்கச்சங்கிலி வழிப்பறி: இளைஞர் கைது!

(யாழ்ப்பாணம்)
மக்கள் நடமாட்டமுள்ள பகிரங்க வீதியில்வைத்து ஒன்பது வயதுச் சிறுமியிடமிருந்து தங்கச்சங்கிலி ஒன்றை பட்டப்பகலில் வழிப்பறி செய்த சம்பவம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிலுள்ள மயிலிட்டியில் நிகழ்ந்துள்ளது.

இத் திருட்டுச் சம்பந்தமாக இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் அவரது உள் அங்கியிலிருந்து தங்கச் சங்கிலியும் கைப்பற்றப்பட்டது!

வீரப்பன் மோகனதாஸ் என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

சம்பவதினம் காங்கேசன்துறை - பருத்தித்துறை வீதி வழியாகச் சென்றுகொண்டிருந்தபோது மயிலிட்டியில் வைத்துச் சந்தேகநபர் சிறுமியின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடினார் என்று சம்பவத்தை நேரில் கண்ட ஒருவர், இவ் வழிப்பறி சம்பந்தமாகப் பொலிசாருக்குத் தெரிவித்தார்.

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பகுதிப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. என். சேனாதிராசா இவ்வழிப்பறி சம்பந்தமாகப் புலன் விசாரணையில் ஈடுபட்டபோது சந்தேகநபர் பஸ் ஏறுவதற்காக பலாலி சந்தி பஸ்நிலையத்தில் நிற்பதாக அறிந்து அங்கு சென்று சந்தேகநபரைக் கைதுசெய்து சோதனையிட்டபோது சந்தேகநபர் அணிந்திருந்ததாகக் கூறப்படும் உள் அங்கியிலிருந்து சங்கிலிமீட்கப்பட்டது.

விசாரணையின்போது சந்தேகநபர் தியேட்டர் ஒன்றில் வேலைசெய்துவந்தது தெரியவந்துள்ளது. (கொ.


மக்கினன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை விதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ஃ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ஃ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினன் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினன் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.


### புனரமைப்பு

(புலோலி)
பருத்தித்துறைத் தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைகள் அமைப்பு வேலைகள் மிகத்துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.


### பயிற்சி

றேடியோ-ரெலிவிசன், ஏயர் கொண்டிசனிங் மூன்று மாத டிப்ளோமா பயிற்சி, சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம் 27-12-80. அனைவரும் சேரலாம்.. நாஷனல் அக்கடமி, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாண
7684

### விற்பனைக்கு

(FORD TRANSIST) போட் ரூன்சிஸ்ற் பிரயாணிகள் வானுக்குரிய போர், கிறுங், கியர்பொக்ஸ் பாப் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 24, 2ம்குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். தொலைபேசி: 8031.
(7668)


## யன்னல் உடைக்கப்பட்டு ரூ. 16,000 திருட்டு

(யாழ்ப்பாணம்)
பூட்டப்பட்டிருந்த வீட்டின் யன்னல் உடைக்கப்பட்டு, வீட்டிலிருந்து 16 ஆயிரத்து இருநூற்றி ஐம்பதுரூபா பெறுமதியான தங்கநகைகள், துணிவகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் சில்லாலையில் நிகழ்ந்துள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக சில்லாலையைச் சேர்ந்த திருமதி கிறேஸ் அருளானந்தம்என்பவர் சங்கானைப் பொலிசில் புகார் செய்துள்ளார்

அவர் தமது புகாரில்; "சம்பவதினம் இரவு 12 மணியளவில் எனது கடையைப் பூட்டிவிட்டு வீட்டிற்குவந்தேன். பூட்டப்பட்டிருந்த வீட்டின் யன்னல் உடைக்கப்பட்டு விலையுயர்ந்த துணிவகைகளும், நகைகளும் திருட்டுப்போயிருந்ததை அறிந்தேன். வீட்டு யன்னல் உடைக்கப்பட்டே இத்திருட்டு நடைபெற்றிருக்கிறது'' என்று தெரிவித்துள்ளார்.

## றெனி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
போது அமளி துமளி ஏற்பட்டது.

றெனி: எனது கூற்றை வாபஸ்பெறமாட்டேன்.

சு. க. எம். பிக்கள்: இவர் என்ன சுதந்திரக்கட்சிச் செயலாளரா-தலைவரா? இவர் சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்.

றெனி: இந்த ராஜினமா பற்றி உறுதியாகவே கூறுகிறேன்.

பிரதி சபா: எப்படி உறுதிப்படுத்துவீர் என நான அறியலாமா?

றெனி: தற்போதய கொத்மலை எம். பி. ராஜினமாச் செய்தபின்னர் அவரின் இடத்திற்கு கடுவல எம். பி. நியமிக்கப்பட இருக்கின்றார்.

இக்கட்டத்தில் சுதந்திரக் கட்சி எம். பிக்களுடன் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனவும் எழுந்து நின்று திரு. மெல் தமது கூற்றை வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். மீண்டும் சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

ஆனந்த தசநாயக்கா: நிதி அமைச்சர் என்னை அவமதிக்கிறார்.

எம். டி. எச்.: ஐ. தே. க. வின் ஸ்தாபக உறுப்பினரான நான் வேறு எந்தக் கட்சியிலும் சேரமாட்டேன். (கரகோஷம்)

பிரதி சபா; கடுவல எம்.பி. யின் கூற்றை அமைச்சர் ஏற்க வேண்டும்.

றெனி: நான் ஏற்கிறேன்.

அடுத்து உரையாற்றிய திரு. ஜெயவர்த்தன தமது நிலை குறித்து தாம சபையில் தனிப்பட்ட விளக்கம் ஒன்றை அளிக்க விரும்புவதாகக் கூறிவிட்டு பின்வருமாறு தெரிவித்தார்.

ஐ. தே. க வின் ஸ்தாபக உறுப்பினரான நான் எனது வாழ் நாளில் அரைவாசிக் காலத்தை கட்சிக்காகத் தியாகம் செய்துள்ளேன்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இவ்வாண்டு ஜனவரி மாதம் 12-ம் திகதி எனக்கு எழுதிய கடிதத்தில் 'என்மீது தனிப்பட்டமுறையிலும் கட்சியிலும் நீங்கள் வைத்திருக்கும் விசுவாசத்தை நான் அறிவேன்' என்று தெரிவித்திருக்கிறார்.

(ஜனாதிபதியின் கடிதத்தை திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன சபையில் வாசித்துக்காட்டினார்).

நான் கட்சிவிட்டு கட்சிமாறுபவன் அல்ல என்றும் ஒரு கட்சியிலேயே அதுவும் அக்கட்சிக்கு விசுவாசமாகவே இருப்பேன் ஒருபோதும் வேறு கட்சுக்கு மாறமாட்டேன். (கரகோஷம்) (ம-?)

## அவசரகாலம் வெளியீட்டுவிழா இன்று

(யாழ்ப்பாணம்)
மனித உரிமைகள் தினமும் 'அவசரகாலம் 79' என்ற நூல் வெளியீட்டுவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை மாலை யாழ். றிம்மர் மண்டபத்தில் நடைபெறுகிறது. திரு சிலன் கதிர்காமர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வண. பிதா போல் கஸ்பரஸ் சிறப்புரை நிகழ்த்துவார். யாழ். எம் பி. திரு. வெ. யோகேஸ்வரனும் கலாநிதி கா. சிவத்தம்பியும் நூல் விமர்சனம் செய்வர்.

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம், கோப்பாய் எம் பி திரு. சி. கதிரவேற்பிள்ளை, சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், திரு. எம். சி சுப்புரமணியம், வண பிதா அருள்நேசன், ஜனாப் பாஷா முகையித்தீன் பிச்சை, பரமேஸ்வரக்குருக்கள், வண. சாம். அல்பிரட் ஆகியோர் நூற் பிரதிகளைப் பெறுவர். (அ)

## லக்ஷ்மன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திருமதி சிறிமா பண்டாரநாயக்கா முன்பு மர்ந்திருந்த ஆசனத்தில்அமர்ந்திருந்ததிருமைத்திரிபால சேனநாயக்காவின் ஆசனத்தில்திரு எஸ். டி, பண்டாரநாயக்காவும் அமர்ந்திருந்தனர். (ம-இ)

## விவாதத்தை

1-ம் பக்கத் தொடர்ச்சி)
ரணையை 23-ம் திகதி எவரும் பிரேரிக்கப்போவதில்லை என்று கூறினார்

இறுதியில் எவ்வாறாயினும் பாராளுமனறம் 23-ம் திகதி நிசயம் கூடும் என்று பிரதமர் கூறினார். (ம-இ)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63- இலக்க அச்சகத்தில் டிசம்பர் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at General PostOffice Sri Lanka. under No: GB 8948/78. The Eelanaadu P. B. No: 49, TeleGrams: Eelanaadu, Phone: 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org